# 3

# அத் - தவ்ஹீத்

## التَّوْحِيْدُ

وَمَآ أَرْسَلْنَا مِنْ قَبْلِكَ مِنْ رَّسُوْلٍ إِلاَّ نُوْحِىٓ إِلَيْهِ أَنَّه لَآ إِلٰهَ إِلاَّ أَنَا فَاعْبُدُوْنِ

''(நபியே!) உமக்கு முன்னர் நாம் அனுப்பிய ஒவ்வொரு தூதரிடமும் 'நிச்சயமாக (வணக்கத்திற்குரிய) நாயன் என்னைத் தவிர வேறு எவருமில்லை எனவே, என்னையே நீங்கள் வணங்குங்கள்' என்று நாம் வஹீ அறிவிக்காமலில்லை'' (21 அல் அன்பியா : 25)

ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் முதல் இறுதித்தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்கள் வரையிலான அனைத்து இறைத் தூதர்களும் உலகில் முன்வைத்த பிரதான செய்தியாக தவ்ஹீத் காணப்படுகிறது.

தவ்ஹீத் எனும் சொல் ''வஹத'' எனும் வேர்ச்சொல்லில் இருந்து பிறந்துள்ளது. ''வாஹித்'' என்ற பதத்துக்கு ஒருவன், ஒன்று ஆகிய கருத்துக்கள் உண்டு. வஹ்ஹத என்ற வினைச்சொல்லிலிருந்து ''தவ்ஹீத்'' எனும் பதம் பெறப்பட்டுள்ளது. இதற்கு தனிமைப்படுத்தல், ஒற்றையாக்குதல், ஓர்மைப்படுத்தல் போன்ற கருத்துக்கள் காணப்படுகின்றன. இவ்வகையில்தான ஓரிறைக் கொள்கையைக் குறிக்கவும் இச் சொல் பயன்படுத்தப்படுகிறது.

இஸ்லாமிய வழக்கில் அல்லாஹ்வை மாத்திரமே ஏக இறைவனாக ஏற்று, அவனுக்கு வழிப்படுவதை குறிக்கவே இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

தவ்ஹீத் என்பதன் கருத்தைப் பின்வருமாறு விளக்கலாம்.

## *1. அல்லாஹ்வே அனைத்தினதும் படைப்பாளன்*

*அவனே அனைத்துக்கும் சொந்தக்காரன், தேவையான அனைத்து வசதிகளையும் செய்து அவனே இப்பிரபஞ்சத்தை நிர்வகிக்கிறான் என விசுவாசம் கொள்வது அவசியமாகும். இக்கருத்தைப் பின்வரும் அல்குர்ஆன் வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன:*

''அல்லாஹ்தான் அனைத்துப் பொருட்களையும் படைப்பவன்; இன்னும், அவனே எல்லாப் பொருட்களின் பாதுகாவலனுமாவான். ''வானங்களினுடையவும், பூமியினுடையவும் சாவிகள் அவனிடமே இருக்கின்றன.'' (39 அஸ்ஸுமர் :62-63)

''அவன் தான் உங்கள் அல்லாஹ் - உங்கள் இறைவன் - எல்லாப் பொருட் களையும் படைப்பவன் - அவனைத் தவிர வேறு நாயனில்லை எனவே நீங்கள் (சத்தியத்தை விட்டும்) எங்கு திருப்பப்படுகிறீர்கள்?'' (40 அல் முஃமின் :62)

''எல்லாப் பொருட்களின் ஆட்சியும் யார் கையில் இருக்கிறது? யார் எல்லா வற்றையும் பாதுகாப்பவனாகவும் ஆனால் அவனுக்கு எதிராக எவரும் பாதுகாக்கப்பட முடியாதோ அவன் யார்? நீங்கள் அறிவீர்களாயின் (சொல்லுங்கள்)' என்று கேட்பீராக. அதற்கவர்கள் '(இது) அல்லாஹ்வுக்கே (உரியது)' என்று கூறுவார்கள். ('உண்மை தெரிந்தும்) நீங்கள் ஏன் மதி மயங்குகிறீர்கள்?' என்று கேட்பீராக.'' (23 அல் முஃமினூன் :88-89)

## *2. அல்லாஹ் மட்டுமே வணக்கத்துக்குரியவன்*

''(நபியே!) உமக்கு முன்னர் நாம் அனுப்பிய ஒவ்வொரு தூதரிடமும் நிச்சயமாக (வணக்கத்திற்குரிய) நாயன் என்னைத் தவிர வேறு எவருமில்லை எனவே, என்னையே நீங்கள் வணங்குங்கள்' என்று நாம் வஹீ அறிவிக்காமலில்லை'' (21 அல் அன்பியா :25)

## *3. அல்லாஹ் பரிபூரணமானவன்; எவ்வித குறைகளும் அற்றவன்*

''(நபியே!) நீர் கூறுவீராக அல்லாஹ் அவன் ஒருவனே. அல்லாஹ் (எவரிடத்தும்) தேவையற்றவன். அவன் (எவரையும்) பெறவுமில்லை (எவராலும்) பெறப்படவுமில்லை. அன்றியும், அவனுக்கு நிகராக எவரும் இல்லை'' (112 அல் இஹ்லாஸ் :1-4)

''அவனைப் போன்று எப்பொருளும் இல்லை. அவன் தான் (யாவற்றையும்) செவியேற்பவன், பார்ப்பவன்'' (42 அஷ் ஷூரா :11)

*சுருங்கக்கூறின், தவ்ஹீத் அல்லாஹ்வை மாத்திரமே வணங்கி வழிபடுமாறு அறைகூவல் விடுக்கின்றது. அல்லாஹ்வே அனைத்தினதும் படைப்பாளன். நிர்வகிப்பவன். எதுவித குறைகளும் அற்றவன். பரிபூரணமானவன் என்பன இதற்கான நியாயங்களாகும்.*


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

இஸ்லாமிய நோக்கில் தவ்ஹீத் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். இதனைக் கீழ்வரும் ஆதாரங்கள் உறுதிப்படுத்துகின்றன.

1. இறைத்தூதர்கள் அனைவருமே தவ்ஹீதை ஏற்று வாழுமாறு மக்களை நோக்கி அழைப்பு விடுத்ததாக அல்குர்ஆன் குறிப்பிட்டுள்ளமை.

2. அல்குர்ஆனில் தவ்ஹீதை வலியுறுத்தும் விதத்தில் தனி ஸூரா உட்பட அநேக வசனங்கள் இடம்பெறுகின்றமை.

3. நற்செயல்கள் அங்கீகரிக்கப்பட தவ்ஹீத் இன்றியமையாத நிபந்தனையாக ஆக்கப்பட்டுள்ளமை.

''அன்றியும், உமக்கும், உமக்கு முன் இருந்தவர்களுக்கும், வஹீ மூலம் நிச்சயமாக அறிவிக்கப்பட்டது என்னவென்றால், 'நீர் (இறைவனுக்கு) இணை வைத்தால், உமது நன்மைகள் (யாவும்) அழிந்து, நஷ்டமடைபவர்களுள் ஒருவராகி விடுவீர்' (என்பதுவேயாகும்)'' (39 அஸ் ஸுமர் :65)

**4. தவ்ஹீதை ஏற்காதவர்களுக்கு சுவனம் ஹராமாக்கப்பட்டுள்ளமை:**

''எனவே எவனொருவன் அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பானோ அவனுக்கு அல்லாஹ் சுவனபதியை நிச்சயமாக ஹராமாக்கிவிட்டான், மேலும் அவன் ஒதுங்குமிடம் நரகமேயாகும், அக்கிரமக்காரர்களுக்கு உதவிபுரிபவர் எவருமில்லை.'' (5 அல் மாஇதா :72)

எனவே இந்த வகையில் இஸ்லத்தின் அடிப்படையிலான தவ்ஹீதை சரிவரப் புரிந்துகொள்வது அத்தியாவசியமான ஒன்று என ஏற்று அல்லாஹ்வுக்கு முற்றிலும் வழிபட்டு நடப்போமாக.

**பயிற்சி**

1. வாஹித் என்ற பதத்தின் பொருள் யாது? வசனத்தின் துணையுடன் விளக்குக.

2. அல்லாஹ்வே இவ்வுலகின் படைப்பாளன் என்ற கருத்தைச் சுட்டும் இரு அல்குர்ஆன் வசனங்களைத் தருக.

3. தவ்ஹீதின் முக்கியத்துவத்தை ஓர் அல்குர்ஆன் வசனத்தின் துணையுடன் விளக்குக.